BNN
மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 22 ஸபர் 3 இதழ் 240
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-10-1986

# போராளிகள் இலங்கை வந்து

## அரசியலில் பங்குபற்ற வேண்டும்

### – அமைச்சர் காமினி

மாத்தளை, செவ்.

''தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் உட்பட சகல தமிழ்ப் போராளிகளும் இலங்கை திரும்பி வடக்குக் கிழக்கில் தங்கி அரசியலில் பங்குபற்றி அப்பகுதி மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்'' என்று காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர்அங்குமேலும் பேசுகையில்; ஈழத்திற்காகப் பிரசாரம் செய்துவரும் சகல தமிழ்த் தலைவர்களும் சென்னையில் இருந்து கொண்டு தமது பிரசாரத்தைச் செய்ய முற்படுவது அர்த்த மற்றதாகும் என்றும், இவர்கள் தமது தாய்

(5-ம் பக்கம் பார்க்க)

## சிவாஜிக்கு மாரடைப்பு

புதுடில்லி ஒக் ,7

பிரபல தென்னிந்திய சினிமா நடிகர் சிவாஜிகணே

(5-ம் பக்கம் பார்க்க)

### கைதான யாழ். இளம் ஆசிரியை விடுதலை செய்யப்படாவிட்டால்

# காலவரையின்றி மலையக பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

## ஆசிரியர், பெற்றோர், மாணவர் தீர்மானம்

(நமது நிருபர்)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின கீழ்ச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் ஆசிரியை ஒருவரை விடுதலை செய்யாவிட்டால் மலையகப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளையும் காலவரையறையின்றிப் பகிஷ்கரிப்புச் செய்வதெனப் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் முடிவுசெய்துள்ளனர்.**

இது சம்பந்தமான சுவரொட்டிகள் மலையகப் பகுதிகளில் எங்கும் பரவலாக நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

ஏற்கனவே இந்த இளம் ஆசிரியையை விடுதலை செய்யுமாறு கோரி தலவாக்கொல்லையைச் சேர்ந்த 25 பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் நான்கு தினங்களாகப் பகிஷ்கரிப்பை நடத்தினார்கள்.

அமைச்சர் திரு எஸ். தொண்டமான் தலையிட்டு, குறிப்பிட்ட ஆசிரியையை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியளித்திருந்தார் ஆனல் அந்த இளம் ஆசிரியை இதுவரை விடுதலைசெய்யப்படவில்லை.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தலவாக்கொல்லைப் பகுதியிலுள்ள அக்கரைப்பத்தனைப் பல்மோரல் தோட்ட ஆசிரியை செல்வி புஷ்பராணி [23 வயது] யும் அவரது தந்தை (மேற்படி தோட்ட பிரதமலிகிதருமான) திரு பாலசிங்கமும் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டார்கள. இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

தந்தையும் மகளும் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து அப்பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர் 20 ஆயிரம் பேரும் வேலை நிறுத்தம் செய்தார்கள் இந்த வேலை

[5ம் பக்கம் பார்க்க]

## மூதூர், பச்சனூரில் படகில்சென்ற படையினர் இருவர் ஆற்றில்மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், புதன்

மூதூரில் கடலுக்குக் பாலுள்ள ஆற்றில் இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று மூழ்கியதால், அதில் பிரயாணம் செய்த இருபடையினர் ஆற்றில் மூழ்கி மரணமானார்கள்.

இச்சம்பவம் நேற்று மூதூர் பச்சனூர் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மூதூரிலிருந்து மூன்று இராணுவத்தினர் திருமலை செல்வதற்காக படகொன்றில் குறிப்பிட்ட ஆற்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அவ்வேளை ஆற்றில் அலை வேகமாக அடித்ததினால் படகு தொடர்ந்து செல்ல முடியாமல் தத்தளித்து ஆற்றில் மூழ்கியது,

படகில் பிரயாணம் செய்தவர்களில் இருவர் ஆற்றில் மூழ்கி மரணமானார்கள். மற்றவர் நீந்திக் கரைசேர்ந்தார். இலங்கை இராணுவத்தைச்

[5-ம் பக்கம் பார்க்க]

## தமிழக மீனவர் புங்குடுதீவில் கரைசேர்ந்தனர்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்நாடுஇராமேஸ்வரம் வேற்கோட்டிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர் படகு புங்குடுதீவுப்பகுதியில் தேற்றுக்கலை கரை ஒதுங்கியுள்ளது

கரை ஒதுங்கியிருந்த இப்படகில் 5 மீனவர்கள் இருந்தார்கள். கரை ஒதுங்கிய படகி

(5ம் பக்கம் பார்க்க)

### தலவாக்கொல்லை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

# உடற்பயிற்சி விரிவுரையாளர் அடித்துக்கொலை

(நமது நிருபர்)

தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் என். பத்மநாதன் (46 வயது) என்பவர் அவரது தங்கும் விடுதியில் வைத்து ஒரு கோஷ்டியினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து இக்கலாசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

சுமார் 9 பேரைக் கொண்ட ஒருகோஷ்டியினரே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர் வல்வெட்டித்துறையில் விவாகம் செய்தவர்.

நேற்று முன்தினம் இரவு மேற்படி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. காரைசுந்தரம்பிள்ளையும் உப அதிபரும், பத்மநாதனும் ஒரு விடுதியில் அறையில் படுத்திருந்தனர்

நள்ளிரவு ஒரு மணியளவில் ஒரு கோஷ்டியினர் கல்லூரி காவலாளியைப் பயமுறுத்திக் கட்டிப் போட்டுவிட்டு அதிபர்கள் படுத்திருந்த அறையை உடைத்து உள்சென்றார்கள்,

அதிபர் எங்கே? என்று கேட்டு தாங்கள் வைத்திருந்த ஆயுதங்களால் கடுமையாக தாக்கிவிட்டு அவ்விடத்தை விட்டு ஓடி தலை மறைவாகி விட்டார்களாம்.

இந்த ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் ஆண்கள்- பெண்கள் உட்பட 125 பேர் கல்விப் பயிற்சி பெறுகிறார்கள்.

கொலை செய்யப்பட்ட விரிவுரையாளரின் சடலம் நேற்று தலவாக்கொல்லை ஆஸ்பத்திரிக்கு பிரேதபரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. நாளையமறுதினம் வியாழக்கிழமை அவரது சடலம் சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை கலாசாலை அதிபர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [நுவ நி,மா]

### சென்னை வந்திருந்த

## மத்திய அரசு உயர்மட்டக்குழு புதுடில்லி திரும்பியது

புதுடில்லி-ஒக் 7

சென்னைவந்திருந்த இந்திய மத்தியரசின் உயர்மட்டத் தூதுக்குழுவினர் இன்று புது தமிழகத்திலுள்ள த.வி கூட்டணியினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவென

(8ம் பக்கம் பார்க்க]

### சாம்பல்தீவு, சல்லிக்கிராமத்தில்

## ஐம்பது குடிசைகள் படையினரால் தீவைப்பு

[நமது நிருபர்]

சாம்பல்தீவுக்கு அடுத்துள்ள சல்லிக் கிராமத்தில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் சுமார் ஐம்பது குடிசைகளுக்குத் தீவைத்துச் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேடுதல் வேட்டையின்

(5-ம்பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

### (பெயர் மாற்றம்)

கடந்த பல காலங்களாக

Intersun Group

என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 8-10-1986 (புதன்கிழமை) தொடக்கம்

★ GLORIA TRAVELS ★

என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A-1441]

### 1987 முதல் மிதிவண்டிகளுக்கான

# அனுமதிப்பத்திரங்களை

## பெறுமாறு புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.குடாநாட்டிலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்கள், மாநகர சபை ஆகியன ஊடாக 1987ம் ஆண்டுதொடக்கம் மிதிவண்டி (சைக்கிள்)களுக்கான அனுமதிப்பத்திரங்களை அதற்குரிய வரிப்பணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறுதமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பாவனையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'இன்று ஏற்பட்டிருக்கும்சிவில் நிர்வாகச் சீர்கேட்டினால் மிதிவண்டிகள் பாவனையாளர்கள்

[5-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கரந்தன் சந்தியிலிருந்து கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் வழியில் 200யார் தூரத்தில் வீடுகட்டவும். தோட்டம் செய்யவும் வசதியான நன்னீர் கிணறுள்ள இரண்டு தோட்டக் காணிகள் விற்பனைக்குண்டு (7பரப்பு, 10½பரப்பு தொடர்பு கொள்ளவும்: 343, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.
[C-50301

நேரத்தை மிதமிடுத்த கையால் இடித்து வறுத்த ''அரிசி மா'' எங்களிடம் கிடைக்கும். 500 கிறும் பெக்கட் ரூபா 9-50 வியாபாரிகளுக்கு விஷேச கழிவு! M G M 777, K K. S. Rd. and 208 1st Cross St. Jaffna. T P; 22611. (C 5065)

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரம்: க சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

Sisil குளிர்சாதனப்பெட்டிகள். Hall set, Gas and Electric cooker, கசட் றேடியோக்கள், புதிய/பழைய Deep freezer, Washing machine. பிள்ளைத் தொட்டில், கட்டில்கள், Kenwood chief. Blender. சுவர்மணிக்கூடுகள். உடுப்புக்கள் விற்பனைக்குண்டு. சி பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவ கல்லூரிக்கும் இடையிலுள்ளது) (C 5068)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது. சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை. புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

## வகுப்புகள்

87-ம், 88-ம் ஆண்டிற்கான G C.E. A/L வகுப்புகள் 16-10-86 ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு; S. அருள்நங்கை 73, உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். C 1425

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11. அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

9 மாத டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள், கேக் ஐசிங், சமையற்கலை, தையற்கலை, பூவேலை, கைவேலை, கோலம், கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல். ஆங்கிலம், முதலுதவி வகுப்புக்கள். ஆரம்பம்: 15-10-86. Ladies' Academy (Regd), Victoria Road, Jaffna. (C 5067)

## தேவை

மெழுகு திரியும், அப்பளமும் தயாரிப்பதற்கு ஆண்களும், பெண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும நேரில் வரவும். ஸ்ரீ கிருஷ்ணமில்ஸ், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
[C 5033]

ஈழத்து படைப்பாளிகளின் இலக்கிய நூல்கள் கண்காட்சிக்கு வைப்பதற்கு தேவைப்படுகிறது. படைப்பாளிகள் எம்மிடம் தொடர்புகொண்டு முற்போக்கு எழுத்தாளர்கள் மாநாட்டில் [illegible] வைப்பதற்கு ஒத்துழைப்பு தரவும். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். C 5017

குடும்பப் பொறுப்பற்ற நன்கு அனுபவமும் கடமையுணர்ச்சியுமுள்ள தமிழ்தாதி உடன் தேவை. மருந்து கொடுப்பதில் அனுபவமும், ஊசி முதலியவை கொடுப்பதில் தேர்ச்சியும் நோயாளிகளை பராமரிக்கக் கூடிய திறமையும் அவசியம்.
கொழும்பில் யாழ். நகரைச் சேர்ந்த குடும்பத்துடன் தங்கியிருந்து தொழில் செய்யக் கூடியவர் மட்டும் விரும்பத் தக்கது தகுந்த அத்தாட்சி தகுதிப் பத்திரங்களுடன் நேரில் சமூகமளிக்கவும். உணவு, தங்குமிட வசதி கொடுத்து மாத சம்பளம் ரூ. 750/ கொடுக்கப்படும் CHRISTY MEDICAL CLINIC, 311 Jampettah Street, Colombo-13. C 5079

### பயிற்சிகள்

Radio, T.V Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்கட்கு: Electronic Centre கல்வளை ரோட், சண்டிலிப்பாய். ஆரம்பம்: 10-10-86 Sat, Sun பி ப 5 00 - 8 00. (C 4960)

## சேவை

யாழ். சைனீஸ்றெஸ்ரூரன் முதலாம் குறுக்குத்தெரு, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களுடைய ஸ்தாபனம்தினசரி இரவு 8-30 மணிவரை திறந்திருக்கும். தொலைபேசி இல: 23460 (C 4790]

## காணவில்லை

எனது வீட்டில் உதவிக்கு நின்ற சந்திரன் என்னும் பையனை நேற்று [6-10-86 காலை எட்டு மணிமுதல் காணவில்லை அவனைப்பற்றிய விபரங்கள்வருமாறு: பெயர் முத்துசந்திரன் வயது 11, உயரம் 3 அடி நிறம் கறுப்பு கடைசியாகக் காணப்பட்டபோது நீலநிறக் கால்சட்டையும் சட்டும் அணிந்திருந்தான். அவனைக் காண்பவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரியுடன தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். செல்வனேஸ்வரன் (தம்பி 16 ஞானவைரவர் கோவில் ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
C 5059

## மரக்கன்று நாட்டினர்

வவனியா, செவ்வாய் நொச்சிக்குளம் அரசினர் பாடசாலைக்கு முதன் முதலில் விஜயம் செய்த வவனியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு வி. சபாநாயகம் பாடசாலை வளவிற்குள் மரக்கன்று ஒன்றினை நாட்டி வைத்தார்.
(இ)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
உதயபிரசாத்
(ராஜன்)
(சென்: பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

படைப்பு:
18-05-1970

அழிப்பு:
08-09-1986

உன்னை நினைக்கையிலே- உதயா என் உள்ளம் எரியுதையா அன்னையாய் நான் இருக்க- மகனே நீ அனாதையாய் போனதென்ன ஐந்து வயதின் முன்னே - நீ அறியாப் பருவத்திலே என் ஆசையைத் தீர்த்து வைக்க மகனாக வந்தாயப்பா பத்துமாதம் சுமக்கவில்லை பாலூட்டி வளர்க்கவில்லை பாசத்தைப் பாலாக - நான் ஊட்டி வளர்த்தேனையா பாசத்தைக் கொட்டி நான் பத்திரமாய் வளர்த்த மகன் பள்ளிக்குப் போறேன் என்று பாசறைக்குப் போனதென்ன நாட்டிற்காய் உயிர்கொடுக்க நான் அறியாமல் போனதென்ன ஈராறு ஆண்டுகளாய் உனக்காக நான் வாழ்ந்தேன்- இனி எனக்காக வாழ்வாய் என்று மனக்கோட்டை கட்டி வைத்தேன், கட்டிய கோட்டை- யெல்லாம் கண் முன்னே இடிந்ததையா அனாதைப் பிள்ளை என்று - உன்னை யார் யாரோ கூறிவிட்டார். உன்னைத் தான் கேட்கின்றேன் - உனக்கு ஏனையா இந்தநிலை. நான் வளர்த்த செல்வமகன் எனக்கிருந்த ஆசைமகன் வீரம் செறிந்தமகன் தீரமுடன் சாந்தி பெற்றான் வீர சொர்க்கத்தில் நீ வாழ்க மகனே.

எனது மகனது மரணச் சடங்கை முன் நின்று நடத்தி இரவு முழுவதும் பாதுகாத்து உதவிய அனைவர்க்கும் அதில் கலந்து பல உதவிகள் புரிந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து மலர் வளையம் சாத்தியவர்களுக்கும் திருப்பலி ஒப்புக் கொடுத்த அதிபர்கட்கும் ஆசிரியர் மாணவர்கட்கும் அவர் உடலைச் சுமந்து சென்ற சக மாணவர்கட்கும் எம் இதய பூர்வமான நன்றியை சமர்ப்பிக்கின்றோம்.

மகனை இழந்து தவிக்கும்,
தாய், சகோதரர்கள்.
கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம். C 5029

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



பிரேமா விஜய்குமார்
(மானிப்பாய்)

மலர்வு: 25-03-1956
உதிர்வு: 08-10-1984
திதி: 16-10-1986

எங்கள் அன்புத் தெய்வமே! இல்லகவிளக்காய் ஒளிவிட்டுஎமக்கெல்லாம் பெருமை தேடித்தந்ததங்கள் நினைவு என்றும் எமது நெஞ்சத்தை விட்டு நீங்காது அன்புள்ளம் கொண்ட தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன்,
அன்புச் சகோதரி கௌரி,
அன்பு மகன் ரஜீவ்குமார்,
மாமி, அம்மா,
சகோதரங்கள்,
மற்றும் உறவினர்கள்.
C 5053

## ஓராண்டு நினைவஞ்சலி



தம்பையா
செல்லம்மா

தோற்றம்; 15-02-1900
மறைவு: 19-09-1985
திதி: 08-10-1986

எங்கள் குலதெய்வமே! நீங்கள் விண்ணுலகெய்தி ஓராண்டு நினைவு பெற்ற தம்மா. நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும், உங்கள் நினைவு என்றும் எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மருமகன் க. கதிரித்தம்பி, மகன் த. சின்னராசா, மகள் க. மங்கையர்க்கரசி. மருமகள் சி. அன்னலெட்சுமி. பேரப்பிள்ளைகள் க. சோதிராஜன், க.முகுந்தன், க துஷிதா, சி அன்புக்கரசி, சி. கலையரசி, சி. தமிழரசி, சி. இங்கர்ஷால்.
(C 5063)

## WANTED

CHUNDIKULI GIRLS' COLLEGE
Dr. Thilliampalam Vocational Training Institute.

A teacher to Conduct classes in Home Economics and Scientific Dress Making.

Apply before 15-th October.

(A-1440) PRINCIPAL.

## Wyman English Language INSTITUTE

வெளிவந்துவிட்டது
''TOEFL'' சர்வதேச ஆங்கிலப் பரீட்சைக்குரிய
பயிற்சிப் புத்தகம் விலை ரூபா 30-00
ஆசிரியர்: S. B. IYAR
கிடைக்குமிடம்: 12, வைமன் வீதி,
நல்லூர். [C-5075]

## அறிவித்தல்

கைதடியைச் சேர்ந்த செல்வன் A நல்லையா ரோட்டரி இலவச கண்ணாடி விநியோகம் சம்பந்தமாக பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

கந்தன் அருள்,
272 (54), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-5052)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ டென்மார்க் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் விரைவில் செய்து தரப்படும். 10-ம் திகதிக்கு முன் தொடர்புகொள்க.

S. நடராசா,
K. K. S. வீதி. கொக்குவில் சந்தி.
[C-5061]

# கனடாவுக்கான இலங்கை ஸ்தானிகர்மீது மேலும் ஆறு அகதிகள் குற்றச்சாட்டு!

ஒட்டாவா, அக் 7

**கனடாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க மீது மேலும் சில மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கனடாவிலுள்ள ஆறு இலங்கைத் தமிழ் அகதிகள் ஜெனரல் வீரதுங்காவினுல் இலங்கையில் தாம் தாக்கப்பட்டதாக இக் குற்றச்சாட்டுகளில் தெரிவித்துள்ளனர்.**

ஜெனரல் வீரதுங்க மீதான இக் குற்றச்சாட்டுக்களை கனேடிய அரசாங்கம் தனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது கனேடிய வெளிவிவகார அமைச்சர் திரு ஜோ கிளார்க் இதுகுறித்து ஜெனரல் வீரதுங்காவிடம் விளக்கத்தைக் கேட்டுள்ளனர்.

ஜெனரல் வீரதுங்க மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள ஆறு இலங்கைத் தமிழ் அகதிகளும் 1979ம் ஆண்டு அவசரகாலச் சட்டத்தின் கீழேயே தாம் பாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

திடீரென் தாம் கைதுசெய்யப்பட்டதாகவும், தம்மீது பெருமளவு சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் ஜெனரல் வீரதுங்க நேரடியாகவே இச் சித்திரவதையில் ஈடுபட்டு தம்மை அடித்தும், உதைத்தும் துன்புறுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர்.

இக்குற்றச்சாட்டுக்களை இலங்கை உயர்ஸ்தானிகர் வீரதுங்க மறுத்துள்ளார். தமக்கு இவைகுறித்து எதுவும் தெரியாதெனவும் 1979ம் ஆண்டு இலங்கையில் வடபகுதி இராணுவப் படைகளின் பொறுப்பதிகாரியாக மட்டுமே தாம் கடமையாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கைத் தமிழ் அகதி ஒருவரின் குற்றச்சாட்டையடுத்து ஜெனரல் வீரதுங்க விவகாரம் கனடாவில் சூடுபிடித்திருந்தது தொடர்ந்து மீண்டும் இவர் மீது மனித உரிமைமீறல் தொடர்பாக கனடா அரசாங்கம் தனது கவனத்தை திருப்பியுள்ளது.

## உபகாரச்சம்பளம்

கொழும்புத்துறை, செவ்

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் சேரவிரும்பும்மாணவிகளுக்குமேலும் ஒரு உபகாரச்சம்பளம் வழங்கப்பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் முன்வந்துள்ளதாகச் சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார்.

## எரியூட்டும் குண்டிலிருந்து பாதுகாப்பு

**விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்படும்போது பொதுமக்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்பது பற்றிய விபரங்கள் அடங்கிய கட்டுரைத் தொடர் ஒன்றை எமது வாசகர்களுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளோம். யுத்தகாலத்தில் எரியூட்டும் குண்டுகள் வீசப்படுமானுல் அவற்றிலிருந்தும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியம். அதுபற்றிய விபரமான கட்டுரைத் தொடர் ஒன்று இன்றிலிருந்து வெளிவருகிறது.**

எரியூட்டும் குண்டுத்தாக்குதல்கள் எனும்போது அவை பெருமளவு தீயை உருவாக்கும் தாக்குதல்களையே குறிக்கின்றன. அதாவது எரியூட்டும் குண்டுகள்விழுந்து வெடிக்கும் இடத்திலும், அதைச்சூழவுள்ள குறிப்பிட்ட பிரதேசத்திலும் தீயைப் பரவச்செய்து அதன்மூலம் நாசங்களை ஏற்படுத்தும் தாக்குதல்களே இவையாகும்.

2-ம் உலகப் போரின்போது குண்டுவீச்சுக்களினுல் உலக நாடுகளில் ஏற்பட்ட நாசங்களில் 80 சதவீதமானவை எரியூட்டும் குண்டுகளினுலேயே ஏற்பட்டவையாகும். இவ்வகைத் தாக்குதல்களினுல் ஏற்படும் தீயானது தொடர்ச்சியாக பலமணி நேரங்களுக்கு சில வேளைகளில் பல நாட்களுக்குக்கூட தொடர்ச்சியாக எரிந்துகொண்டிருப்பதால் மக்கள் மத்தியில் பெருமளவு பீதியும், குழப்பமும் தோன்றி அவர்களது அன்றாட வாழ்க்கை முறையே ஒழுங்கற்றதாகிறது. அத்துடன் பொருட்சேதம், உயிர்ச்சேதம் என்பனவும் ஏற்படுவதால் மக்களின் உறுதியான மனோநிலையைக் கூட பாதிப்படையச் செய்துவிடலாம். இவற்றினைக் கருத்திற்கொண்டே சிறீலங்கா விமானப்படையினரும் இவ்வகைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். எனவே இவ்வகை தாக்குதல்களினுல் ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதற்கும், அவற்றுக்கெதிராக போராடுவதற்கும், எதிரியின் எண்ணங்களை நிறைவேறவிடாது தடுப்பதற்கும் மக்கள் தயாராக வேண்டும். இத்தாக்குதல்களுக்கு எதிரான முன்னேற்பாடுகளையும் தாக்குதலின் போது ஏற்பட்ட தீயை அணைப்பதற்குரிய வழிவகைகளையும் மக்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

ஆகாய மார்க்கமாக குண்டுகள் போடப்படும்போது அவை கீழே விழுந்து வெடிக்கு முன்பாகவே அவை எவ்வகைக் குண்டுகள் என அனுமானிப்பது கடினமாகும். எனவே முதலாவதுதொடரில் கூறியிருப்பதுபோல குண்டு வீசப்படும்போது அகழிகளினுள்ளே பாதுகாப்புத் தேடுவதே உடனடியாகச் சிறந்த முறையாகும். அதிலும் குறிப்பாக மூடிய அகழிகளே எரியூட்டும் குண்டுத் தாக்கத்துக்கு சிறப்பான பாதுகாப்பு வழியாகும்.

பொதுவாக எரியூட்டும் குண்டுத் தாக்குதலுக்கெதிரான பாதுகாப்பு என்பது 'தீ'க்கெதிரான பாதுகாப்பேயாகும். அதாவது பெருமளவு தீ ஏற்படாமல் செய்வதும் அதன் தாக்கத்தினைக் குறைத்து மேற்கொண்டு பரவவிடாமல் செய்வதும், தீயானது உடலிலோ அல்லது பொருட்களிலோ பற்றியிருப்பின் அதனை அணைப்பதவுமே அங்கு முக்கியமான செயல்களாகும். எரியூட்டும் குண்டுகள் விழுந்து வெடித்தவுடனேயே அதிகளவு வெப்பத்தை உருவாக்கக்கூடியவை என்பதே இங்கு விஷேச கவனத்துக்குரியது. இவ்வகைக் குண்டுகள் தோற்றுவிக்கும் தீயின் தன்மை குண்டுகளின் வகைகளிலேயே தங்கியுள்ளது. அதாவது விழுந்த இடத்தில் இருந்தே அதிகளவு வெப்பத்துடன் கூடிய தீயை தோற்றுவிக்கக்கூடியவையாகவோ அல்லது விழுந்த இடத்திலிருந்து பாரிய பிரதேசமொன்றில் தீப்பொறிகளை சிதறச் செய்யக்கூடியவையாகவோ அல்லது ஒரே சமயத்தில் பெரியதொரு நிலப்பரப்பில் தீயை உருவாக்கி

[7ம் பக்கம் பார்க்க]

பங்களாதேஷ்--------------------

## ஜனதிபதி தேர்தலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குத் தடை

டாக்கா, அக். 7

பங்களாதேஷில் இம்மாதம் 15ம் திகதி நடைபெறவிருக்கும் ஜனதிபதி தேர்தலுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் ஜனதிபதி எர்ஷாத் தடைவிதித்துள்ளார்.

ஜனதிபதி தேர்தலை குழப்புவதற்காக எதிர்க்கட்சியினர் எடுக்கும் முயற்சிகளை தடுப்பதற்காகவே இதற்கான இராணுவச் சட்ட உத்தரவை தரு எர்ஷாத் விடுத்துள்ளார்.

ஜனதிபதி தேர்தலுக்கு குந்தகம் விளைவிக்கும்வகையில் கருத்துக்களையோ செய்திகளையோ இச்சட்டத்தைமீறி வெளியிடுவோருக்கு ஒரு ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

ஜனதிபதி தேர்தலுக்கு எதிராக பொதுமக்களின் குரல் எழுப்பப்படுவதை நசுக்குவதற்காகவே இந்த இராணுவச் சட்டப் பிரமாணங்கள் ஜனதிபதி எர்ஷாத்தினுல் விடுக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம்' தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க பத்திரிகை நிறுவன முகாமைகாரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக கடந்த மூன்றுமாதகால இடைவெளிக்குப் பின் பங்களாதேஷின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'ஒப்சேவர்' மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. (வா)

## இடமாற்றம்

சுண்டுக்குளி, செவ்வாய்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் எழுதுவினைஞராக பணிபுரிந்த திரு வி சபாரத்தினம் கடந்த மாதத்திலிருந்து யாழ் செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (இ)

## ஆலோசனைக் குழு தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் பட்டணஎல்லையுள் இருக்கும் ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர்களது சமாசக் கூட்டம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ச. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கடன்வசதி கொடுப்பதற்கான ஆலோசனைக் குழுவொன்று தெரிவு செய்யப்பெற்றது. [ச]


## பிரயாண ஒழுங்குகள்

★ **லிபியா:** ஒயில் கொம்பனி வேக்கேஸ்

★ **குவைத்:** ஆஸ்பத்திரி கிளீனேஸ்-ஆண், மெயின்ரனன்ஸ் கிளீனேஸ், ஆஸ்பத்திரி பெண் கிளீனேஸ், கவுஸ் மெயிடஸ், 100 கிலோ அரிசி மூட்டை தூக்கக்கூடிய லேபரேஸ், றெயிலர் றைவேஸ், போக்லிப்ற் றைவேஸ்,

★ **துபாய்:** எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோகிருபர், ஸ்ரோர் கீப்பேஸ், மெக்கானிக்ஸ், சிவில்இஞ்ஜினியேஸ் சேவியேஸ், ஹெவி and லைற்வெயிக்கிள் றைவேஸ், காப்பென்ரேஸ், மேசன், குக், சிப் குக்.

★ **நோத் யேமன்:** அக்கிரிகல்சர் லேபரேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஸ்கூல்கிளீனேஸ்.

மேற்குறிப்பிட்ட இடங்கட்கு வருமான ஒழுங்குகள் பெற விரும்புவோர் உடனடியாக சகல ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னுல் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1377]



## GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

**GLORIA TRAVELS,**

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

[A-1391]

### மணிவாக்கு

தூரத்தில் இருப்பது பற்றிச் சிந்தனைசெய்யாத மனிதனுக்குத் துன்பம் பக்கத்தில் உண்டு.

— கொன்பூஷியஸ்

## நமதுநோக்கு

# ரம்ஃபால் இடித்துக் காட்டும் உண்மை

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடினார் மகாகவி பாரதியார்.

நவஇந்தியா எவ்வாறு அமையவேண்டும் என கற்பனைவடித்த மகாகவி சகல மனிதர்களும், வயிறார உண்ணவேண்டும். உண்ண உணவில்லையெனில், சுதந்திரம், விடுதலை என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளே எனக் கருதினார் அவர்.

மனிதன் உழைக்கவேண்டும். உழைப்பின் பயனாக ஊதியமும், உணவும் அவன் பெறவேண்டும். இல்லையெனில் இந்த உலகம் இருந்துதான் என்னபயன். என்று ஆவேசம்கொண்ட நெஞ்சத்திலிருந்து உதிர்ந்தவை அந்தச் சொற்கள்

பாரதிகாலத்தில் முப்பது கோடியாகவிருந்த இந்திய மக்கள் தொகை இன்று இரண்டு மடங்கையும் தாண்டிவிட்டது அத்தனை பேருக்கும் சோறிடும் முயற்சியில் அந்த நாடு முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதைப் பார்க்கின்றோம்

இந்த முயற்சிகளைக் குழப்பிவிடவும் அங்கே நிரந்தரமான பற்றுக்குறையை உருவாக்கி எப்பொழுதுமே தமது ஆதிக்கத்துக்குள் வைத்துக்கொள்ளவும் எத்தனையோ வெளிச் சக்திகள் முயன்றுவருகின்றன.

இந்தியாவில் மாத்திரமல்ல, வளர்ந்துவரும் நாடுகள் பலவற்றிலும், பின்தங்கிய நாடுகள் எல்லாவற்றிலும் இந்த வெளிச் சக்திகள் தமது செல்வாக்கை நிலைகொள்ளச் செய்வதற்கு முயன்றுவருவதை உணர்கின்றோம்.

ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும், பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. மக்கள் புல் பூண்டுகளைப் புசிக்க ஆரம்பித்துவிட்டமையால், கால்நடைகள் உணவின்றி மரிப்பதாகச் செய்திகள் வருகின்றன.

இதேவேளை, உற்பத்திப் பெருக்கத்தினால் மிதமிஞ்சிப்போன உணவுவகைகளை சில ஐரோப்பிய நாடுகள் கடலில் கொட்டிவருவதாக கூறப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகளின் கனிப்பொருட்கள், மூலவளங்களைச் சுரண்டிச்செல்லும் இந்த மேற்கு நாடுகள் தம்மால் சூறையாடப்பட்ட நாடுகளின் ஏழைமக்களுக்குஇரக்கப்படுவதில்லை. கடலில் கொட்டும் உணவுகளை அவர்களுக்குக்கொடுத்துதவ முன்வருவதில்லை.

வளரும் நாடுகளில் ஏற்படும் அரசியல் பூசல்களில் அவசியமில்லாமல் தலையிடுவதில் அக்கறை கொள்ளும் அளவுக்கு, பட்டினியால் வாடும் மக்களுக்காக இரக்கம் காட்டுவதில்லை.

வளர்முகநாடுகளுக்கிடையில் ஏற்படும் அண்டைநாட்டுத் தகராறுகள், உள்நாட்டு இனப்பூசல்கள் போன்றவற்றை தமது சுயநல நோக்கிற்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு. ஆயுதஉதவி, பணஉதவி என தாராளம் காட்டும் இந்த நாடுகள் உலகின் பல பாகங்களிலும் பஞ்சத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களைக் கைகொடுத்துக் காப்பாற்றுவதற்கு முன்வர முடியவில்லையே!

அண்மையில் ஜமெய்க்காவில் நடந்தேறிய எட்டாவது கொமன்வெல்த் சட்ட மகாநாட்டில் கொமன்வெல்த் செயலாளர் நாயகம் திரு. சிறிதாத் எஸ். ரம்ஃபால் இதைத்தான் இடித்துக்காட்டியிருக்கிறார்.

''நீதி-உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்'' என்ற தலைப்பில் நடந்துள்ள இந்த மகாநாட்டில் ஆரம்பஉரையாற்றிய திரு. ரம்ஃபால், ''பட்டர் (வெண்ணெய்) மலைகளும், பால் ஏரிகளும் நிறைந்த இந்த உலகில், இலட்சக்கணக்கானவர்கள் எப்பொழுதுமே பசியினால் நைகிறார்கள், பலர் இறந்தும் போகிறார்கள் என்றால் நீதி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்.

ஐரோப்பிய நாடுகளின் கண்களை மட்டுமல்ல அமெரிக்காவின் கண்களையும்கூட திரு ரம்ஃபாலின் கருத்துத் திறந்துவிடுமானால் உணவின்றித் தவிக்கும் ஆபிரிக்க ஆசிய மக்கள் பயன்பெறுவார்கள்.

---

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம் வியா

வாரிவளவு நல்லியக்க சபை கடந்த 11 வருடங்களாக நடாத்திவரும் சங்கீத போட்டிகளில் தொடர்ந்து முதலிடத்தைப்பெற்ற செல்வி பரமேஸ்வரிகணேசனுக்கு பாராட்டும், காரைநகர் கிராமிய கூட்டுறவு வங்கியில் ரூபா 1000 வைப்பிலிட்டு அதற்கான பத்திரம் வழங்கலும் எதிர்வரும் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி சபையின் நவராத்திரி வைபவத்தில் நடைபெறும்.

செல்வி பரமேஸ்வரி இம்முறை யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

## நவராத்திரி பூசை

யாழ்ப்பாணம், வியா.

அராலி வடக்கு நம்பாப்புலம் வைரவர் ஸ்ரீ பத்திரகாளிதுர்க்கா நவராத்திரி பூஜை கடந்த 4-ம் திகதி ஆரம்பமானது. இப்பூஜை காலையும் மாலையும் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். (எ)

---

உலக அரசியல் — அவதானி

## வல்லரசுகளின் ஆயுதச்செலவு ஒரு நிமிடத்துக்கு "பத்து லட்சம் அமெரிக்க டொலர்"

## உலகின் 400 கோடி மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் போஷாக்கின்மையால் மடிகின்றனர்

## வாரஇறுதியில்நடைபெறும் றீகன்—கொர்பச்சேவ் சந்திப்பு இந்த அவல நிலைக்கு எவ்வாறு உதவும்?

### அணுத்தளங்களின் ஆபத்து

ஜனாதிபதி கென்னடியின் பாணியில் பேசிய பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைமர் நீல் கின்னெக், ''எனது நாட்டுக்காக நான் சாவேன். ஆனால் எனக்காக நாடுசாக ஒருபோதும் அனுமதியேன்'' என்று கூறியிருக்கிறார் பிரிட்டிஷ் மக்கள் அலங்காரப்பேச்சில் எடுபட மாட்டார்கள் என்ற போதிலும் தொழிற்கட்சி பாரம்பரிய சிந்தனைத் திறமைசாலிகளை உருவாக்கியதால், இந்தச் சொல்லோவியம் பொருட்சுவையற்றதெனக் கொள்வதற்கில்லை.

விழுந்தது மெய்; ஆனால் மீசையில் மண் படவில்லையென்ற பாங்கில் மீசையற்ற பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரும், மேற்கு ஜெர்மன் அதிபர் கோலும் றீகனுக்கு காங்கிரஸில் ஏற்பட்ட தோல்வியை பரவாய் பண்ணாது தங்கள் பிடிவாதமான ஐரோப்பிய சமுதாயத்துக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட தடைகளில் தடம்புரளுகின்றனர்

அமெரிக்காவில், பிரிட்டனில். மேற்கு ஜெர்மனியில் மக்கள் அமைதியை விரும்புகின்றனர். அணுஆயுத விருத்தி. அணுப்பரீட்சை, நட்சத்திரப் போர் போன்ற பயங்கர போர்முறைகளையும், அவற்றின் ஒத்திகைகளையும் வெறுக்கின்றனர்.

### இஸ்ரேல்

உலக சமுதாயத்தின் மனச்சான்று அணுஆயுதப்போர் ஒழியவேண்டுமென்பதை, வல்லரசுகள் உணர்ந்தபோதும், மக்களின் சமாதானவாழ்வுக்கு ஆவன செய்வதில் ஆர்வம் இன்றி ஆயுதப் போட்டியில் யார் முந்துவதென்ற இரு வல்லரசுகளின் தீவிரத்தை பின்பற்றுவதும், ஆறுவறு அணுஆயுத நாடாய் உயர்ந்திருக்கும் செய்தி உறுதிப் படுத்துகிறது.

இந்தச் சிறுநாடு இன்று உலக அரசியலைக் கலக்கி வைக்கும் பலமுடையதாக இருப்பதால் மத்திய கிழக்கில் அது இட்டதே சட்டம் என்ற அமெரிக்க ஆட்சியின் கொள்கை மாறாத நோயாகத் தொடர்கிறது.

### பிரிட்டன்

இஸ்ரேலுடன் அணுஆயுத வல்லரசுகள் ஆறாக அதிகரித்திருக்கும் வேளையில் உலக வரலாற்றில் எந்த யுத்தத்திலும் [போக்லன்ட்ஸ் உட்பட] தோல்வி காணாத பிரிட்டன், அமெரிக்காவின் 'பந்தபாக' இருப்பதை எந்த பிரிட்டிஷ் பிரஜை விரும்புவார்? றீகனைப் போல் இரண்டாவது தடவை ஆட்சியைக் கைப்பற்றிய தாட்சர் அதனை விட்டுப்போகும் சித்தமற்றவர். திறம்பட அரசியலில் தலைமைப்பீடம் வகித்திருந்த போதும், மக்கள் சமுதாயத்தை இன்றைய கட்டத்தில் ஒன்றுபடுத்த அவரால் முடியுமாவென்பது சந்தேகம்.

பிரிட்டனில் அணுஆயுதங்களைத் தடைசெய்வதற்கும் அங்குள்ள அமெரிக்க அணுத்தளங்களை மூடுவதற்கு ஆதரவாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி தீர்மானம் நிறைவேற்றியதும், கட்சியின் தீவிரவாத இடதுசாரிகள் சகல தளங்களையும் மூடிவிட வேண்டுமென்ற தீர்மானம் தோல்வியடைந்ததும் பிரிட்டனில் எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் சமத்துவ கொள்கையே மக்கள் நாடுவது புலனாகின்றது

ஜனாதிபதி றீகனுக்கு லிபியாவின் ஆகாய விமானத்தாக்குதலுக்கு பிரிட்டிஷ் பிரதமர் அனுமதி வழங்கியதை ஒரு பெரும் துரோகச் செயலென சாதாரண பிரிட்டிஷ் கருதுவாரென்பதில் ஐயமில்லை.

### போரின் பேராபத்து

காவடியைத் தூக்கினவனுக்கே அதன்பாரம் தெரிவதுபோல உலக யுத்தங்களில் பட்டபாடும் கெட்டகேடும் பிரிட்டனைப்போல் வேறெந்த நாடும் அனுபவப்படவில்லை, நாட்டைப் பாதுகாக்க என்றும் தயாரான பிரிட்டிஷ் மக்கள் இன்று உலகில் மலிந்துவரும் ஆயுதப் தளபாடங்களையும், நாடுகளின் போர்க்கோலத்தையும் வெறுக்க நியாயமுண்டு. இதனைபிரதிபலிக்கும் ஆட்சிமாற்றம் அந்த நாட்டுக்கு அவசியமாகின்றது. அதேசமயம் பொருளாதாரத் துறையில் நொந்து போயிருக்கும் பிரிட்டன் அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடுவது இயல்பு

இதற்கு சோவியத் ரஷ்யாவில் அதிகரித்துவரும் ஆதிக்கம் பிரிட்டன் மட்டுமல்ல, ஐரோப்பிய வல்லரசுகள் அனைத்தும் விரும்பாத பண்டம் மார்க்கிஸவாதம் கம்யூனிசம் ஐரோப்பாவையும் அதன் பண்டைய நாகரீகத்தையும் பிளவுபடுத்திவிட்டதென்ற கண்டனமும் கசப்பும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவி நிற்கின்றன.

### முதலாளித்துவம் கம்யூனிசம்

இனிவரக்கூடிய உலகயுத்தம் முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் என்று நினைப்பவர் உலக அரசியலை ஆழ அறியாதவர்களே. ஜப்பானும் சீனாவும் அந்நியோன்னியமாக சிறப்புடன் வாழ வழி பிறக்கும் சாத்தியம் உண்டு.

இந்த சித்தாந்தப் போர், பேராசிரியர்கள், அரசியல் ஆராய்ச்சியாளர் மத்தியில் இடைவிடாது நடந்து கொண்டேஇருக்கும் சீனவைப் பார்த்தால் இதன் அர்த்தம் புரியும்.

### சீன

நூறு கோடி மக்களைக் கொண்ட இப்பெரும் நாடு ஆசியாவின் பலத்த தூண் என்று பிரதமர் நேரு கூறி வந்தார். மக்கள் வளத்தை நாட்டின் பலமாக போற்றிய அற்புதம் செஞ்சீனத்தின் ஒப்பற்ற தலைவர் மாவோவுக்கு உரியது. அது ஆசிய பண்பாட்டில் அமைந்த தத்துவம். மாவோவின் சிந்தனைகள் கால வெள்ளத்தால் இலகுவில் அளியாதவை.

கடந்த ஆறு வருடங்களில் சீனா கண்ட பொருளாதாரமாற்றம், புரட்சிக்கு வித்திட்டு வெற்றி கண்ட புனித கம்மியுனிஸ்ட் தலைவர் மாவோவை ஒதுக்கிவிட்டது போல் தோன்றும்; ஆனால் அதுஅப்படியல்ல. பெருந் தலைவர் என்ற மோகம் ஒழிவதையே இன்றைய 'வட லின்' விரும்புகின்றன.

### இன்றைய ஆட்சி

ஸ்டாலினுக்குப் பின், குருசேவ் நடத்திய திருவிளையாடல் இங்கு நடைபெறுதென்று இன்றைய தலைவர் டெங் சொன்னபோதும், முதலாளித்துவ நாடுகளிடம் கம்மியூனிச நாடுகளாகிய நாம் படிக்க வேண்டிய பாடங்கள் பல

[5ம் பக்கம் பார்க்க]

---

## சக்தியின் பெருமை

### ஸ்ரீ மந்திர மாதிருகா புஷ்பமாலாஸ்தவம்

கறங்கலை யமுதப் பெருங்கட லகத்துக்
காண்டகு கவின்மணித் தீவிற்
பிறங்குகற் பகக்காச் சூழ்வர நாப்பட்
டெப்புறு கடம்பவா டிகையில்
நிறங்கெழு மணித்தூ ணாயிரநெருங்குஞ்
சபைநடு நிமிர்விமா னத்தே
திறங்கெழு சிந்தா மணிபுனை சிங்கா
சனமனத் தமைக்கு வனம்மே.

பொருள்: ஒலிக்கின்ற அலைவீசும் அமுதப்பெருங் கடலில் காட்சிக்கினிய அழகிய மணித்தீவில் பெருமை பொருந்திய கற்பகமரங்கள் வேலியாகச் சூழ. ஒளிமயமான கடம்பவனத்தின் மத்தியில் ஒளி வீசுகின்ற இரத்தினத்தூண்கள் ஆயிரம் செறிந்த மண்டபத்தின் மத்தியில் உயர்ந்த கோயிலின் கண்ணே சிறந்த சிந்தாமணியால் அலங்கரிக்கப்பட்ட சிங்காசனத்தை, அம்மையே எனது மனத்தில அமைக்கிறேன். 'அங்கு எழுந்தருளுவாயாக' என்பது குறிப்பு.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

# "வடக்கு, கிழக்கு வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படமாட்டாது"

(வவனியா நிருபர்)

''எக்காரணம் கொண்டும் வடக்கு கிழக்குப்பகுதி வேலைத் திட்டங்கள் நிறுத்தப்பட மாட்டாது. அவை தொடர்ந்தும் இடம் பெறும்'' என்று சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ண அண்மையில் வவனியா பஸ்நிலையத் திறந்த வெளியில் நடைபெற்ற கதிரமலையின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் தமதுரையில் கூறியதாவது:

''வடபகுதியில் எமது இயக்கத்தின் தொண்டன் கதிரமலையின் மறைவு கேள்விப்பட்டவுடன் பெரும் துயரமடைந்தேன்.

''கதிரமலையினை கடத்தியவர்கள் அவரை கொலை செய்யப் போவதாக அறிவித்திருந்தால் அவரை காப்பாற்ற என் உயிரைய வது கொடுத்து இருப்பேன் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை நான் பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது இக்குற்றங்கள் யாவும் பொய்யானது என்பதனையும் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

'முழுமனித சமுதாயத்தினையும் ஒரு குடும்பமாக சிந்திக்கின்றோம். எமது சர்வோதய வரலாற்றிலேயே இப்படியான கொலைச்சம்பவம் இதுவே முதல் சம்பவமாகவுள்ளது. ஆயுதம் ஏந்திய வடபகுதி வாலிபர்கள் மத்தியில் கதிரமலை அஹிம்சை, சத்தியம் மனப்பான்மையிலே சேவையாற்றிவந்தார்.

''மக்களைப்பிரித்து வைக்கும் முயற்சியிலோ தூது சொல்லும் விடயங்களிலோ நாம் ஈடுபடவில்லை. கஷ்டப்படும் மக்களுக்கு உதவவே கதிரமலையினை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தோம்.

'கதிரமலையை கொலை செய்தவர்கள் மீது நான் வருப்புக்கொள்ளவோ ஆத்திரமடையவோ இல்லை. ஆனால் அவர்கள் உண்மை நியாயம் எது என்பதனை அறியவில்லை என்பது தன் எனக்குக்கவலையாகவுள்ளது.

''வடக்கில் வேலை செய்யும் எமது தொண்டர்களை இனி மேலாவது இப்படியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து கொலை செய்யவேண்டாமென வடபகுதியிலுள்ள ஆயுத மேந்திய வாலிபர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்'' எக்காரணம் கொண்டும் தமது வடக்கு, கிழக்கு பகுதிவேலைத் திட்டங்கள் நிறுத்தப்படமாட்டாது. அவை தொடர்ந்தும் இடம் பெறும் என்றும் கூறிய சர்வோதய தலைவர் இந்த நாட்டினை ஒரு தர்ம தீபமாக்க சர்வோதயத்துடன் சேர்ந்து வடபகுதியில் ஆயுதம் ஏந்தியவர்கள் ஒத்துழைக்க ஆயுதங்களை கீழ வைத்து விட்டு வரும்படியும் வேண்டுகோள் விடுத்தார்.

எல்லோரும் ஒன்று சேர்ந்து அஹிம்சை, சத்தியம் என்ற கோட்பாட்டின் கீழ் இந்நாட்டினை அபிவிருத்தி செய்து முன்னேற்ற வரும்படியும் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் தெரிவித்தார்.

வவனியா இணைப்பதிகாரி கேணல் இரத்திநாயக்காவும் வன்னி சமாதானக் குழுத்தலைவர் வவனியா கண்டிவீதி விகாரதிபதி விமலசாரதேரோவும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். [கே]

## எழுத்தாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்.

'இன்றைய நிலையில் எழுத்தாளர் களின்பங்கு எவ்வறு அமைய வேண்டும் என்பதனையிட்டு ஆராய்ந்து கொள்வதற்காக எழுத்தாளர் மாநாடு ஒன்று 17-ந் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் இந்துவிடுதியில் நடைபெறும்.

பேராசிரியர் (நந்தி) சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் (பிரேம் ஜி) ஞானசுந்தரம் ''இன்றையநிலையில் எழுத்தாளர்களின் கடமை'' என்ற தலைப்பில் மாநாட்டின் நோக்கம் குறித்து விளக்கி அறிக்கை சமர்ப்பிப்பார்.

முற்போக்கு எழுத்தாளர்கள் உட்பட சகல எழுத்தாளர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள்

கவியரங்கு. கருத்தரங்கு என்னவும் மாநாட்டில் இடம் பெறும். (ச)

## காலவரையின்றி---

[1ம் பக்கத்தொடர்ச்சி]

நிறுத்தம் 5 நாட்களுக்கு நடைபெற்றது.

இந்தவேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து திரு பாலசிங்கம் விடுதலை செய்யப்பட்டார்.

இவரது மகளான செல்வி பா புஷ்பராணியை விடுதலை செய்யுமபடி 25 பாடசாலைகளின் மாணவர்களும் ஆசிரியர்களும் 5 நாள் பகிஷ்கரிப்பு செய்தார்கள் அமைச்சர் தொண்டமான் இதுவிஷயத்தில் தலையிட்டு ஆசிரியை விடுதலை செய்விப்பதாக உறுதியளித்தார். பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

மேற்குறிப்பிட்ட ஆசிரியை இதுவரை விடுதலை செய்யப் படாததையிட்டு ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவைப் பகுதிகளில் நேற்று கண்டனச் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டிருந்தன.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியை விடுதலை செய்யப்படாவிட்டால் மலையகப் பகுதிகளிலுள்ள சகல பாடசாலைகளும் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்'' என்று அச்சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [நுவ. நி மா.]

## படையினர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்த சார்ஜன்ட் பிரேமச்சந்திர, சிப்பாய் சில்வா ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

இவ்விருவரினது மரணவிசாரணையையும் மூதூர் பதில்நீதவான் எம். கே. செல்வராஜா மேற்கொண்டு விபத்துமரணமெனத்தீர்ப்பளித்தார். மூதூர் பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் மதுமடண்டா சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

# ஒரு நாள் கிரிக்கெட்: இறுதிப்போட்டியில் அஸி 7 விக்கெட்டுகளால் வெற்றி

புதுடில்லி அக்7.

இந்திய - அஸ்திரேலிய அணிகளுக்கிடையே ராஜ்கோட்டில் இன்று நடைபெற்ற ஆறுவதும் இறுதியானதுமான ஒரு நாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48 ஓவரில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 260 ஓட்டங்களைப்பெற்றது ஆரம்ப ஆட்டக்காரர் 108 லாம்பா பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்றார். இதில் இரு சிக்ஸர்களும் 8 பவுண்டரிகளும் அடங்கும். லாம்பா ஒரு நாள் கிரிக்கெட்டில் பெற்ற முதலாவது செஞ்சரி இதுவாகும். கபில்தேவ் 58 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 46,3 ஓவரில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் அலன் போடர் 91 ஓட்டங்களுடனும், ரிச்சி 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் நின்றனர்.

ஆறு ஒரு நாள் போட்டிகள் அடங்கிய இந்தத் தொடரில் இந்திய அணி 3-2 என்ற ரீதியில் வெற்றி பெற்றுள்ளது ஒரு போட்டி மழை காரணமாக தடைப்பட்டது தெரிந்ததே' (ஒ-ஊ)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நாளையும் நாளை மறுதினமும் நவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

இவ்விரு நாட்களும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. முதலாம் நாள் நிகழ்ச்சியில் திரு இ ஜெயராஜா தலைமையில் இலக்கிய ஆணைக்குழு நடத்தப்படவுள்ளது

இவ்விலக்கிய ஆணைக்குழுவில் 'இராமனுக்குப் புகழைத் தேடிக்கொடுத்தவர் பரதன், இலக்குமணன் குகன், அனுமான், சீதை, கைகேயி' என்ற விடயம் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 'காரைக்கால் அம்மையார்', 'கம்பருக்கருளிய கலைவாணி' என்ற தலைப்புகளில் கல்லூரி மாணவர்களால் வில்லிசைக் கச்சேரி நடத்தப்படும். [ஒ]

## பிரஜைகள் குழு கூட்டம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை மத்தி பிரஜைகள் குழுவின் கூட்டம் இனிமேல் பிரதி சனிக்கிழமைகள் தோறும் வட-இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென பிரஜைகள் குழுத் தலைவர் அறிவித்துள்ளார். [இ]

## வல்லரசுகளின்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

உண்டு என்கிறார். அதற்கு ஆதாரமாக சில பல வெற்றிகளையும் காட்டுகிறார்

### ஐஸ்லன்ட் சந்திப்பு

கம்மியூனிஸம்; முதலாளித்துவத்திடம் பாடம் கேட்கும் நிலை ஏற்படுமாயின், கம்மியூனிஸம் எங்கு தலையெடுக்கிறதோ அந்தக் கொடுமையை அகற்றத் தயாராகின்ற றீகன். தமது சிந்தனையில் மாற்றம் உண்டாக இடமளிப்பாரா? இந்த வினாவே இன்று இவ்விரு உலகத் தலைவர்கள் ஒருவரில் ஒருவர் கொண்ட சந்தேகத்தைப் போக்கவல்லது. ஒருவரிடமிருந்து மற்றவர் படித்துக்கொள்ள அதிகம் இருக்கிறதென்ற ஞானம் நிச்சயம் உதயமாக வேண்டும்.

இச் சந்திப்பு ஒரு உச்சி மாநாடல்ல. நட்சத்திரப் போர் போன்ற விடயங்கள் எள்ளளவும் பேசப்படா என்று வெள்ளை மாளிகை வெருட்டுகிறது இந்தச் சந்திப்பில் எந்த அற்புதமும் நிகழாது. ஆனல் நெருங்கிய உறவுக்கு இது அவசியம். றீனுக்குத் தமது ஆட்சியில் உணடான தயக்கங்கள், தோல்விகள், கோபர்சேவ் தம்முடைய ஆட்சியில் காணும் பலவீனங்கள், தேசத்தின் பொருளாதாரத் தேக்கம் போன்ற குறைகள் உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் தெரிவதில்லை. எனவே கெடுபிடிப் போரும், அணு ஆயுதப் பெருக்கமும் ஒருவரை ஒருவர் முறியடிக்கும் மதியற்ற திட்டத்தில் எழுந்திருக்கின்றன

இந்தப் போக்கை மாற்றி மூன்றும் உலக வறிய நாடுகளுக்கு நிபந்தனை இன்றி வழங்கும் உதவியே உலகில் சமாதானத்துக்கு வழிகோலும்.

## சமய அறிவுப் போட்டி

உடுவில், செவ்.

இணுவில் இந்து மகாசபையின் ஆதரவில் அருள்மிகு சிவகாமி அம்மன்கோவிலில் நடைபெற்றுவரும் நவசக்தி விழாவையொட்டி நடாத்தும்சைவ அறிவு எழுத்துப் பரீட்சை 9ம் திகதி நடைபெறும்.

இப்போட்டி சம்பந்தமான ஒழுங்குகளை சமய அறிவுப் போட்டிச்சபைத் தலைவர் எஸ். சோதிப்பெருமாள் கவனித்து வருகிறார். (எ)

## விழிப்புக்குழு தீர்ப்புவழங்கியது

பண்டத்தரிப்பு, செவ்.

மாதகலைச்சேர்ந்த கர்ப்பிணியான இளம்பெண் ஒருவர் தமது கணவர் தம்மைக் கைவிட்டு வேறு திருமணம் செய்து விட்டார் என்றும் அவரிடமிருந்து தபாரிப்புபணம்பெற்றுத் தருமாறும் கோரிமாதகல் விழிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்

இதுபற்றி இரு பகுதியினரையும் அழைத்து விசாரணை செய்த திரு எஸ். சிங்கராயர் தலைமையிலான மாதகல் விழிப்புக்குழு, மேற்படி இளம் பெண்ணுக்கு அவரது கணவர் தாபரிப்புப்பணமாகமொத்தம் 20 ஆயிரம் ரூபாவை குறிப்பிட்ட திகதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது. அத்துடன் இக்குற்றச் செயலுக்காக 500 ரூபா அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளதாக விழிப்புக்குழுவின் செயலாளர் திரு பொன்னம்பலம் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (வா)

## அனுமதி---

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து வருகின்றன எனவே மிதிவண்டிகள் கையாடலை முற்றாக ஒழிக்குமுகமாகவே 1987ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து மாநகரசபை, மாவட்டஅபிவிருத்திச் சபை உப அலுவலகங்களூடாக மிதிவண்டிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை அதற்குரிய வரிப் பணத்தை செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.'

'1987முதல் யாழ்குடாநாடெங்கும் இது அமுல்படுத்தப்படும்''. (மா)

## சிவாஜி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சன் திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக கோயம்புத்தூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவாஜிகணேசனுக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் அவரது உடல் நிலை தேறிவருவதாக அறிவித்துள்ளனர்.

## போராளிகள்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டிற்கு வந்து வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தப்பாடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார். [ஒ]

## தமிழகமீனவர்..

[1ம் பக்க தொடர்ச்சி]

லிருந்தமீனவர்களைபுங்குடுதீவுக் கரையிலிருந்து இளைஞர்கள்குழு ஒன்று பாதுகாப்பாக அழைத்துச் சென்று அவர்களின் நலன்களைக் கவனித்தார்கள். (மா)

## ஐம்பது---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோது சாம்பல்தீவிலுள்ள வீடுகளிலிருந்து நகைகள், ரொக்கப் பணம் உட்படப் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினர் சாம்பல்தீவை முற்றுகையிட்டுத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே இதனைத் தொடர்ந்து மூவாயிரதத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகித் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எதுவிதத் தொடர்புமற்ற இப்பகுதிகளில் உணவுப் பொருட்கள் இன்றி மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

திருமலை இந்து இளைஞர் மன்றமும் ப நோ. சங்கமும் இப்பொழுது உணவுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)


## கடைசி நேர வரி விளம்பரம்

### தேவை

வீட்டுடன்தங்கிநின்று உதவி செய்யக்கூடிய கார்ச்சாரதி உடனடியாகத் தேவை. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ர இரத்தினசிங்கம், C/o M/s, Jaffna Electricals, 6, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (C 5084)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு - நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கலர்
நியாயம்

நியூ விக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடு
சிப்பிக்குள் முத்து (தரமான பிரதி)
கமலஹாசன், ராதிகா
நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532 (A1392)

## தாயே இயம்பு!

சூதாட்ட மாடித் தூயவரைக் கெடுத்து
தீது புர்வோர் சினத்தை - தாயே
சுட்டெரிக்க மாட்டாயோ துரோகிகளின் நேசம்
விட்டென்னைக்காக்க விரைந்து.

அன்புப்பால்பொங்க ஆற்றல் அறிவால் நல்
லின்பம் செழிக்க இதயம் துன்பத்தைத்
தூசாய் மதிக்கத் துணிவுத் துணை தரும் நல்
லாசான் கிடைக்கும் நாள் என்று!

அன்பினால் வையத்தை ஆள்வோம் எனத்துணிந்து
இன்பம் அடைய எண்ணினேன் துன்பத்தைத்
தந்தென்னை வாட்டத் தகாதவை என்செய்தேன்
தாயே ஏதும் இயம்பு.

– திருமதி காவேரி. யோகநாதன்
மானிப்பாய்.

★ ★ ★

## வீரமா சக்தியே!

பாரிலே புகழாய் வாழ்ந்த
பரம்பரை இன்றலைந்து
திருமோ துயரம் என்றே
தினந்தினம் ஏங்கு கின்றோம்!
யாருமே எமக்கு இல்லை
யாவையும் நீதான் தாயே
வீரமா சக்தி நல்ல
விடியலைக் காட்டுவாயே!

– ப. பகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு

## மூன்று மாடி கட்டிடம்

பண்டத்தரிப்பு, செவ்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்ச ஆதீனம் வட்டுக்கோட்டையில் நடாத்திவரும் ஆண் பிள்ளைகளுக்கான விடுதியை விஸ்தரிக்குமுகமாக மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை நிறுவவுள்ளது.

வவனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளிலிருந்து வன்செயல்களினால் அகதிகளாக வந்து சேர்ந்துள்ள ஆண் பிள்ளைகளின் நலனை முன்னிட்டு தற்போதைய விடுதியான ''இவிஸ்கோல்டிங்'' என்ற விடுதியை விஸ்தரிக்குமுகமாக இந்த மாடிக்கட்டிடம நிறுவப்படவுள்ளது.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்சக ஆதீன முதல்வர் பேராயர் வண. டி. ஜே. அம்பலவாணரின் பெருமுயற்சியினால் நிறுவப்படும் இந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் கீழ் மாடிக் கட்டிட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுநடைபெற்று வருவதாக விடுதி முகாமையாளர் திரு. எஸ். இரத்தினவேல் தெரிவித்தார். (வா)


## பிரயாண ஒழுங்குகள்

- ★ லிபியா: (ஓயில் கொம்பனி வேக்கேஸ்)
- ★ குவைத்: (ஆஸ்பத்திரி பெண் கிளீனேர்ஸ்)
- ★ குவைத்: (ஆஸ்பத்திரி ஆண் கிளீனேர்ஸ்)
- ★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)
- ★ குவைத்: (100 கிலோ அரிசி மூட்டை தூக்கக் கூடிய லேபறேஸ்)
- ★ குவைத்: (றெயிலர் றைவேஸ் போக் லிப்ற் றைவேஸ்)
- ★ துபாய்: (எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோ கிருபர், ஸ்ரோர் கீப் பேஸ், மெக்கானிக்ஸ், சிவில் இஞ்ஜினியேஸ், சேவியேஸ், ஹெவி அன் லைற் வெயிக்கிள் றைவேஸ், காப் பெ ன்ரே ஸ், மேசன், குக் அன் சீப்குக்
- ★ நோத்யெமன்: (அக்கிரிகல்சர் லேபறேஸ்
- ★ சவுதி அரேபியா: (ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
- ★ சவுதி அரேபியா: (ஸ்கூல் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர் சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

**பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங்**
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
பி. கு.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1376)


## காணி அன்பளிப்பு

அராலி செவ்

அராலி கிழக்கு அம்பாள் அபிவிருத்தி சங்கத்தினருக்கு கிணறு வெட்டுவதற்கென அராலி கிழக்கைச் சேர்ந்த திரு. வே. கணபதிப்பிள்ளையின் ஒத்தாசையுடன் திரு த. இரத்தினசிங்கமும், திரு வே தியாகராசாவும் ஒன்றிணைந்து தங்கள் சொந்தக் காணியின் ஒருபகுதியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

## வீடு கட்டிக் கொடுக்கத் தீர்மானம்

பண்டத்தரிப்பு, செவ்

தென்னிலங்கையிலிருந்து வன்செயல்கள் காரணமாக அகதியாக வந்துள்ள சில்லாலையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. இயக்கம் சுமார் 15 ஆயிரம் ரூபா செலவில் வீடு ஒன்றை நிறுவிக் கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது

(வ)

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 22 (8-10-86)
கிழமை: புதன்
திதி: பஞ்சமி பி ப. வரை
நட்ஷத்திரம்: அனுசம்
காலை 8-46 வரை

மேடம்: வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும் எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப் புண்ணாக்கும் பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும்.

இடபம்: காதலர்களுக்குப் பொன்னான தினம். யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம். தொழிலும் சீர் பெறும்.

மிதுனம்: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு. பலவழிகளாலும் பணம் பாழாகும். மனத்திடம் வேண்டும்.

கடகம்: குடும்ப வாழ்க்கை இன்று சமமாகவிருக்கும். டாக்டர்களுக்கும் செல்வாக்குப் பெருகும். தொழில் சம விருத்திக்கிடமுண்டு.

சிங்கம்: வாகனம் கொள்வனவு செய்ய உகந்ததினம் கூட்டுவியாபாரம் முன்னேற்றமடையும். புதிய நண்பர்கள் சேர்க்கையுமுண்டு

கன்னி: இதயம் இன்பத்தால் துள்ளும். பெரியவர் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலாலும் சிறப்புண்டு.

துலாம்: மேலிடத்து செல்வாக்கும் பாதிக்கப்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். ஆயுதபீடைக்கு மிடமுண்டு நிதானம் அவசியம்.

விருச்சிகம்: ஏமாற்றம் தாக்கும். தானிய நஷ்டமும் உண்டாம். உடல் நலமும் பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் அவதானம் வேண்டும்.

தனுசு: புதிய வாழ்க்கையில் ஈடுபடுவீர்கள். கல்வித் துறையில் புகழ் கிட்டும். புதிய தொழில்மூலம் நன்மை பிறக்கும்

மகரம்: அன்னியர்களுடன் பழகுவதில் அதிக கவனம் செலுத்தவும். மனதில் அமைதி குன்றும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றும்.

கும்பம: வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் தோன்றும். இதயபாரம் அகலும். இல்லறத்திலும்இனிமை தவழும்.

மகரம்: வட்டிக்கடை வைத்திருப்பவர் மேலும் அது குட்டிபோடும். வெளிநாடு செல்லும் பயணத்திற்கு அத்திவாரமிடப்படலாம், புத்திரர் மகிழ்ச்சியுமுண்டு

திருமலை
வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்கு

இம்மாத இறுதிக்குள் டென்மார்க் செல்ல விரும்புவோர் உடனே தொடர்புகொள்ளவும்.

ஆங்கிலம் சரளமாகப் பேசத் தெரிந்தோராயின் கனடாப் பிரயாணமும் ஒழுங்கு செய்யலாம்.

த. செல்வநாயகம்,
''ஸ்ரீ சாந்தி நிகேதன்'',
8/2, வளாக ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [C-5076]



## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட் ★ பெல்ஜியம்
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலண்ட் ★ டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.
பாஸ்போட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

**டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
[ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை]
உடுவில் கிழக்கு, உடுவில். A 1372


யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின்

## கேள்வி அறிவித்தல்- 1987

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1987ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1987ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி வரை குத்தகைக்கு வாடகைக்கு விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22-10-86ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ். அபி சபை செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் உரிய தொகையைச் செலுத்திய பின்னர் அவ்வவ் உப அலுவலகங்களால் 21-10-86ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். மூலப் பிரதி யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்திலும், இணைப்பிரதி உரிய அலுவலகத்திலும் 22-10-86ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய முழு விபரங்களையும் கேள்விப் விப்பத்திரப் பெறுமதி, கேள்விப் பிணைத் தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,

| | |
|---|---|
| யாழ். அபி. சபை | செயலாளர், |
| அலுவலகம், | யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம். | அபிவிருத்திச்சபை. |

### உப அலுவலகங்களின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை | 28. | நெல்லியடி |
| 02. | மானிப்பாய் பட்டினம் | 29. | கிளிநொச்சி |
| 03. | உரும்பிராய் ஊரெழு | 30. | கொக்குவில் |
| 04. | உடுப்பிட்டி | 31. | நல்லூர் |
| 05. | நாரந்தனை | 32. | தெலலிப்பளை |
| 06. | மல்லாகம் | 33. | மயிலிட்டி |
| 07. | மானிப்பாய் கிராமம் | 34. | அச்சுவேலி |
| 08. | ஏழாலை | 35. | நீர்வேலி |
| 09. | உடுவில் | 36. | சுழிபுரம் |
| 10. | கோப்பாய் | 37. | புலோப்பளை |
| 11. | அனலைதீவு | 38. | நயினாதீவு |
| 12. | நெடுந்தீவு | 39. | வட்டுக்கோட்டை |
| 13. | வேலணை | 40. | மண்டைதீவு |
| 14. | எழுவைதீவு | 41. | அல்லைப்பட்டி |
| 15. | காரைநகர் வடக்கு | 42. | புங்குடுதீவு |
| 16. | அராலி | 43. | பண்டத்தரிப்பு கிராமம் |
| 17. | காரைநகர் தெற்கு | | |
| 18. | கட்டைவேலி | 44. | புத்தூர் |
| 19. | குடத்தனை | 45. | செமபியன்பற்று |
| 20. | நாவற்குளி | 46. | கச்சாய் |
| 21. | மூளிப்பற்று | 47. | கைதடி |
| 22. | இரணைதீவு | 48. | மிருசுவில் |
| 23. | புலோலி | 49. | வரணி |
| 24. | சங்கானை | 50 | சாவகச்சேரி |
| 25. | பண்டத்தரிப்பு பட்டினம் | 51. | பூநகரி |
| | | 52. | பல்லவராயன்கட்டு |
| 26. | காங்கேசன்துறை | 53. | கரைச்சி |
| 27. | சுன்னாகம் | 54. | முகமாலை |

(A-1438)

# எரியூட்டும் குண்டிலிருந்து..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கக்கூடியவையாகவோபல்வேறு வகைப்படுகின்றன இவற்றை தவிர இவ்வாறு விமான மார்க்கமாக போடப்படும் எரியக்கூடிய குண்டுகளில், 'கிளர் ஒளிக்குண்டுகள்' எனப்படும் ஒருவகையும் அடங்குகின்றது. இவை மனிதர்களுக்கோ, பொருட்களுக்கோ சேதங்களை உருவாக்கும் நோக்கோடு போடப்படுபவை அல்ல. இவ்வகைக் குண்டுகள் வானத்திலேயே வெடித்து பெரியதொரு பிரதேசத்துக்குச் சிதறி சிறிதுநேரம் வானத்திலேயே நின்று எரிகின்றன.

இவற்றின்மூலம் அப்பிரதேசம் ஒளிப்படுத்தப்படுகிறது. இதனால் எதிரி விமானி இரவு நேரங்களில் இலக்குகளை இலகுவாக அடையாளங்காண முடிகிறது. இவற்றின் எரியூட்டும் குண்டுகளிலிருந்து பிரித்து இனங்காண மக்கள் பழகிக்கொள்ள வேண்டும். அத்தோடு இவ்வகைக் கிளர் ஒளிக்குண்டுகள் ஒரு பிரதேசத்தை ஒளிப்படுத்தும்போது அவ்வொளி வெள்ளத்தினுள் அங்குமிங்கும் திரிந்து உங்கள் நடமாட்டத்தினை எதிரிக்குக் காட்டிக்கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். இனி ஒவ்வொரு வகைக் குண்டுகளையும் பற்றிப் பார்ப்போம்,

### மக்னீசியம், தேமைற் வகை எரியூட்டும் குண்டுகள்

இவ்விருவகைக் குண்டுகளில் தேமைற் வகைக்குண்டே அதிகளவு சக்தி வாய்ந்தது. இவை பொதுவாக அளவில் சிறியவையாகவே காணப்படுகின்றன சிலவகைக் குண்டுகள் மக்னீயசிம், தேமைற்இரண்டையும் ஒருங்கே கொண்டவையாகக் கூடக் காணப்படுகின்றன. ஜேர்மனியத் தயாரிப்பான எரியூட்டும் குண்டானது 1 கிலோ கிறும் நிறையுள்ளது இதுஉள்ளேதேமற்றையும் வெளிக் கவசமாக மக்னீசியத்தையும் கொண்ட ஒரு எரியூட்டும் குண்டாகும்.

பிரித்தானியத் தயாரிப்பான எரியூட்டும் குண்டானது அளவில் பெரிதாகும். இது 25 இறாத்தல் நிறையுடையதாகும் இதன் முனையிலும் தேமைற் பதார்த்தம் காணப்படுகிறது. பொதுவாகத் தேமைற் குண்டுகளே நிறங்களையுடைய தீச்சுவாலைகளை ஏற்படுத்தக் கூடியவை.

இவ்வகைக் குண்டுகள் கட்டிடங்கள் போன்ற நிலையான பொருட்களைத் தீப்பற்றச் செய்வதற்காகவே போடப்படுகின்றன இவை விழுந்த இடத்தில் இருந்தே அதிகளவு வெப்பத்தை உடைய தீயை உருவாக்குவதால் கட்டிடம் ஒன்றின் மேல் விழுந்து இலகுவாக அதைத் தீப்பற்றச் செய்கிறது. தேமைற் 2500°C வெப்பத்தை உடனடியாகக் கொடுக்கக் கூடியதாகவும், மக்னீசியம் 1300°C வெப்பத்தை தரக்கூடியதாகவும் காணப்படுகின்றன இவற்றின் வெப்பநிலைகள் கட்டிடங்களின் உருக்குச் சட்டங்களைக்கூட வளைத்து உருக்கிவிடக் கூடிய தன்மை படைத்தன இவற்றின் தாக்கத்தினை அதிகரிக்கச் செய்வதற்காக உயர் சக்தி வெடிமருந்தைக் கொண்ட குண்டினையும் இவற்றுடன் இணைத்தும் பயன்படுத்தலாம்.

மக்னீசியம் தேமைற் வகைக் குண்டுகள் உயர்ந்த மாடிக் கட்டிடங்களின் மேற் கூரைகளில் விழுந்து தீயை ஏற்படுத்தியிருப்பின் அதனை அணைப்பதற்காக அணுகுவது சிரமமான காரியமாகும். அவ்வேளைகளில் மேலே பற்றிக் கொண்ட தீயானது கீழ்நோக்கி ஒவ்வொரு மாடியாகப் பரவிக் கொண்டே வரும். கட்டிடங்களின் கூரைகள், தரைப் பகுதிகள், உள்ளே உள்ள பொருட்கள் ஆகியவற்றின் தன்மையிலேயே தீபரவும் வேகமும் தங்கியிருக்கும் எனவே இவ்வகையில் கட்டிடங்களின் கூரை மேல் விழும் எரியூட்டும் குண்டின் விளைவைக் குறைக்க வேண்டுமானால் மேற் பகுதிகளைத் தீப்பிடிக்க முடியாத பொருட்களால் காப்பிட வேண்டும். கட்டிடங்களின் மேற் பகுதிகளின் தன்மைக்கேற்ற வகையிலும், மக்களின் வசதிக்கேற்ற வகையிலுமே அக்காப்பு அமைய வேண்டும் பின்வருவனவற்றுள் யாதாயினுமொன்றை தெரிவு செய்து அவ்வாறு அமைத்துக் கொண்டால் உங்கள் கட்டிடங்களைத் தீயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதோடு அது ஏனையவற்றிற்குப் பரவுவதையும் தடுக்கக் கூடியதாக இருக்கும்

1. ¼ அங்குலத் தடிப்புள்ள உருக்குத் தகடு.

2 ஒரு அடுக்கு மணல் மூட்டைகள (இம்மூட்டைகள் ஒன்றுடனொன்று இயலுமான வரை நெருக்கமாக இருப்பது விரும்பத்தக்கது)

3 3 1/2 முதல் 4 அங்குலங்கள் வரை தடிப்புள்ள கொங்கிறீற்

4 2 அங்குல தடிப்புள்ள உலர்ந்த மணல்.

5 2 அங்குலத் தடிப்புள்ள நீறிய சுண்ணாம்பு.

6 2 1/2 அங்குலத் தடிப்புள்ள சாம்பல்.

7. 2 அங்குலத் தடிப்புள்ள புல், பூண்டுகளற்ற மண்.

8 3/4 அங்குலத் தடிப்புள்ள அஸ்பால்ட்.

(தொடரும்)

---

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சறூஜ்ஜான்**

யாழ்ப்பாணம் காதிஅபூபக்கர் வீதியைச் சேர்ந்த முஹம்மது மௌசூன் றாபிஞ தம்பதிகளின் செல்வப்புதல்வன் முஹம்மது சறூஜ்ஜான் 8-10-86 இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை பிரான்ஸில்இருக்கும் டடா, மம்மி, வாப்பம்மா, அப்பா, உம்மம்மா, மாமிமார்கள், மாமாமார்கள், சச்சிமார்கள், சாச்சாமார்கள் அனைவரும் எல்லாம்வல்ல அல்லாஹ்வின் கருணையால் பலகலையும் பெற்று நாடு போற்றும் உத்தமனாக பல்லாண்டு காலம் நீடுழிவாழ வாழ்த்துகின்றார்கள். (C 5064)

---

விபத்துக்குள்ளான

# சோவியத் அணுசக்தி நீர்மூழ்கி 3 1/2 மைல் ஆழத்தில் மூழ்கியது

வாஷிங்டன், அக். 6

அமெரிக்காவுக்கருகே மே. அத்லாந்திக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளான சோவியத் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் முற்றிலு நீரில் மூழ்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இந் நீர்மூழ்கி விபத்தில் 3 சோவியத் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

பேர்முடா தீவுக்கு 600மைல்கள் வடக்கிலேயே இவ்விபத்து இடம்பெற்றது, அணுசக்தி ஏவுகணைகளை இந்நீர்மூழ்கிக் கப்பல் கொண்டிருந்ததால் இவ்விபத்தையடுத்து அணுசக்தி கதிரியக்கம் பரவும் அபாயம் ஏற்படலாம் எனக் கருதப்பட்டது. ஆயினும் இதற்கான சாத்தியம் இல்லையென்று சோவியத் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை நீருக்கடியில் மூன்றரை மைல்கள் ஆழத்தில் அந்த அணுசக்தி நீர்மூழ்கி தற்போது மூழ்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த நீர்மூழ்கி சோவியத் கடற்படையிலுள்ள மிகப் பழமையான நீர்மூழ்கி ரகத்தைச்சேர்ந்ததென்று தெரிவிக்கப்பட்டது.

---

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்.

புதிய விஞ்ஞானக் கல்வி நிலைய மாணவர்கள் நடாத்தும் வாணி விழா எதிர்வரும் 12ம் திகதி ஞாயிறு அதிபர் இ. கருணாநிதி தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

''வாழும் வரை போராடு'' நியாயங்கள் சாவதில்லை என்ற நாடகங்களும் விடுதலையை நோக்கி என்ற வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

ஆசிரியர்கள் க. சிறீபாலன், அப்பன், தில்லைநடேசன், ந. டம்பேசுவரன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (சி)

---

## மக்கள் கஷ்டம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியில் தொலைபேசி வசதியின்றி மக்கள் பெரும் கஷ்டம் அடைந்துள்ளனர். முல்லைத் தீவுத் தபால் கந்தோரில் நேரடித் தொலைபேசி வசதி இருந்ததாயினும் அதனுடைய கட்டுப்பாட்டுப் பகுதியை ராணுவத்தினர் முகாமுக்கு எடுத்துச் சென்று விட்டதனால் பல மாதங்களாக முல்லைத்தீவுப் பகுதியில் தொலைபேசி வசதி இல்லாமல் மக்கள் கஷ்டமடைந்துள்ளனர்.

தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காக மக்கள் 45 மைல் பிரயாணம் செய்து வவனியாவுக்குப் போகிறார்கள்.

---

## அரை ஆண்டு நினைவஞ்சலி



**திரு. க. சதாசிவம்**

தோற்றம்: 7-10-1905

மறைவு: 8-4-1986

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் அமைதியின் இருப்பிடமாய் யாவருக்கும் வழிகாட்டியாய் உற்றார், உறவினர் அயலார் போற்ற நடந்த எங்கள் குடும்பத்தின் அனபுத்தெய்வமே எங்களை விட்டு பிரிந்து ஆறுமாதங்களாயினும் உங்கள் நினைவால் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

41, செப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

A 1436

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### 1986ம் ஆண்டிற்கான பரீட்சைகள்

(1) விஞ்ஞானபீட இரண்டாம் வருடப் பரீட்சைகள் 20-10-1986 (திங்கட்கிழமை) தொடக்கம் நடைபெறும். இதைத் தொடர்ந்து மூன்றும் நான்காம் வருடப் பரீட்சைகள் நடைபெறும். பரீட்சைக்குரிய அட்டவணைகளை பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவித்தல் பலகைகளில் பார்க்கவும். 1986/87 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞானபீட விரிவுரைகள் 3-11-86 இல் ஆரம்பமாகும்.

(2) கலைப்பீடத்தின் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும். (அ) பட்டப்பின் டிப்ளோமா (கல்வி) 27-10-86. (ஆ) மூன்றாம் வருடப் பரீட்சைகள் 28-10-86.

(இ) இதனைத் தொடர்ந்து நான்காம் வருடப் பரீட்சைகளும் ஆரம்பமாகும். பரீட்சைக்குரிய அட்டவணைகளை பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவித்தல் பலகைகளில் பார்க்கவும்.

1986/87-ம் ஆண்டிற்கான கலைப்பீட விரிவுரைகள் 20-10-86 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்.

06-10-1986.
யாழ். பல்கலைக்கழகம்.

A 1445

---


## பிரயாண ஒழுங்கு

**குவைத்:** 11-10-86க்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ என்னுடன்தொடர்பு கொள்ளவும்.

1. சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர், இயந்திர பராமரிப்பாளர்.
2. முதலாந்தர ஆயந்திர திருத்துநர் (First Class Mechanic)
3. உபகரண தொழில் நுட்பவியலாளர்
4. இயந்திர பொருத்துநர் (Fitter Machinery)
5. பொது பொருத்துநர் (Fitter General)
6. நிர்மாணிப்பாளர் (Fabricator)
7. மின்னியலாளர் (Electricians)
8. மின் மேற்பார்வையாளர் (Electrical Foreman)
9. கணனி இயக்குநர் (Computer Operator)

**V. P. பாலா**
''திருமங்களம்''
இடைக்காடு,
வளலாய்,
அச்சுவேலி.

**V. P. பாலா**
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

C-5044


---


## கேள்வி அறிவித்தல்

### காரியாலய திருத்த வேலைகள்:

மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க காரியாலய கட்டிட திருத்த வேலைகளுக்கான கேள்விகள் கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து 14-10-86ம் திகதி முற்பகல் 11-00 மணி வரை குறித்த சங்க நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கக்கூடிய ரூபா 100/-ம் மீளளிக்கப்பட முடியாத ரூபா 25/-யும் செலுத்தி கேள்விப் பத்திரத்தை சங்கத்தில் பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விகள் 14-10-86ம் திகதி முற்பகல் 11-30 மணிக்கு சங்க நிர்வாகத்தால் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்களும் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை காரியாலய கடமை நேரத்தில் சமுகமளித்து அறிந்து கொள்ளலாம்.

க. சந்திரராசா,
பொதுமுகாமையாளர்

மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
மானிப்பாய்.

[A-7444]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 8-10-86

யாழ். கோட்டை இராணுவ முகாமில்

# மின் விளக்குகள் பூட்டுவதற்காக லொறி பாஸ் எடுக்கச்சென்றவர்கள் பணயம்

யாழ்ப்பாணம் புதன்

தூர லொறிச்சேவை நடாத்த சுமார் இருபத்தைந்து தமிழர்கள் யாழ்.கோட்டை இராணுவமுகாமிற்குப் பாஸ் பெறுவதற்குச் சென்றபோது இராணுவத்தினர் அவர்களைத் பணயமாகத் தடுத்துவைத்திருந்து தமது பாதுகாப்பிற்காக அதிக ஒளி கூடிய மின்சாரத்தைப் பொருத்திய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

அதிசக்திவாய்ந்த தூரம் பாயக்கூடிய சனரகபுதிய பீரங்கிளை யாழ்.கோட்டையில் இராணுவத்தினர் பொருத்தி வைத்திருப்பதனாலேயே மேலும் மின்விளக்குகள் அங்கு பூட்டப்பட்டன.

நண்பகல்வரை பணயம் வைக்கப்பட்டிருந்த அப்பொது மக்களைக்கொண்டு மின்சாரம் மேலும்பலவிடங்களுக்கும் பரவக்கூடியதாக, அங்கு காணப்பட்ட பற்றைகள் செடிகளை வெட்டித்துப்பரவும் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

தாம் மேற் கொள்ளவேண்டிய வேலைகள்முடிந்த பின்பே லொறிக்காரர்கள் தூரசேவையில் ஈடுபடுவதற்கான பாஸ்களை இராணுவத்தினர் வழங்கினர்.

லொறிசேவைக்கான பாஸ் பெறச்சென்றவர்கள் தடுத்துப் பணயமாக வைக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் நன்றாகக் கவனிக்கப்பட்டனரெனத் தெரிய வருகிறது. (ச)

## மத்திய உயர்மட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டில்லி திரும்பினர்.

நிர்வாகசீர்திருத்தத்திற்கான இணையமைச்சர் ப. சிதம்பரம் அரசியல் அமைப்பு நிபுணர் எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரே இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

இவர்கள் தமிழகத்தில் கூட்டணித்தலைவர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்

புதுடில்லி திரும்பியுள்ள இவர்கள் நாளை அல்லது நாளை மறுதினம் பிரதமர் ராஜீவைச் சந்தித்து தமது தமிழக விஜயத்தின் பெறுபேறுகள் பற்றித் தெரிவிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹர்த்தால் அனுஷ்டிப்பு

ஒட்டுசுட்டான், செவ்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களான சி. வரதராஜா (ரூபன்), செ முருகானந்தம் (ஜோசப்), க செல்வராஜா (கண்ணன்), செ.பாலசிங்கம் (பாபு), பொ. உதயகுமார் (ராஜா) ஆகியோர் கடந்தவரும் ஒட்டுசுட்டான் வெள்ளிமலை ஏற்றத்தில் இராணுவத்தின் திடீர்தாக்குதலின் போது மரணமடைந்தனர்

இவர்களுக்கு ஓராண்டு நினைவாக கற்சிலைமடு, மன்னாகண்டல் கி சே. அலுவலர் பிரிவிலுள்ள கிராமங்களெங்கும கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு, வாகன போக்குவரத்து நடைபெறாமல் சகல நிறுவனங்களும் மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறறது

க. பொ. த. உயர்தர

## கல்வியைத் தொடரமுடியாத கவலையில் மாணவி தற்கொலை

மாவிட்டபுரம், செவ்.

க.பொ த. [உயர்தர] வகுப்பில் கல்வி கற்கவிரும்பிய மாணவி ஒருவர் அது கைகூடாமையால் நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

சூராவத்தையைச் சேர்ந்த துரைராஜா மரின் நன்சிராணி [வயது 17] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

மேற்படி மாணவி க.பொ.த. [உயர்தர] வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். ஆனால் க பொ த. [சாதாரண] பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாமையால் அதில் மீண்டும் தோற்றிச் சித்தியடையுமாறு பாடசாலையில் தெரிவிக்கப்பட்டிருந்தது இருமுறை க பொ த [சாதாரண] பரீட்சையில் கணித பாடத்தில் தோற்றியும் சித்தியடைய முடியவில்லை. இதனால் உயர்தர வகுப்பில் அவர் தமது கல்வியைத் தொடரமுடியாதநிலை ஏற்பட்டது. இதனால் கவலையுற்ற அம்மாணவி நஞ்சருந்தினார்.

இவ்விபரங்கள் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டதை யடுத்து மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா தம்பிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (ஊ)

## யாழ். வங்கிகளிலும் கிழிந்த பண நோட்டுக்கள்

யாழ்ப்பாணம், புதன்:

யாழ்ப்பாண வங்கிக் கிளைகளிலும் இப்போது கிழிந்த பண நோட்டுக்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையிலுள்ள பண நோட்டுக்கள் புழக்கத்தில் குறைவாக இருப்பதே இதற்கான காரணமாகும்

இரண்டு ரூபா, ஐந்து ரூபா, பத்து ரூபா பண நோட்டுக்களே இவ்வாறு கிழிந்த நிலையில் வழங்கப்படுகின்றன.

கோட்டையில் இயங்குகின்ற மக்கள் வங்கியில் கொடுக்கப்படும் கிழிந்த பண நோட்டுக்களுக்குப் பதிலாக நல்ல நோட்டுக்கள் தரும்படி கேட்டால் கிழிந்த நோட்டுக்களே இருப்பதாகத் தெரிவிக்கின்றனராம். [ச-ஒ]

கமிஷன் அடிப்படையிலான

## ஒய்வூதிய காசுக்கட்டளைக்கு கழகம் ஆட்சேபம்

உடுவில், செவ்.

"ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து கமிஷன் பெற்றுக்கொண்டு காசுக்கட்டளை வழங்குவது அநீதியானது. சட்டத்துக்கு விரோதமானது கமிஷன் பெற்று ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் காசுக் கட்டளை வழங்குவதைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம்".

கமிஷன் பெற்றுக்கொண்டு ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் காசுக் கட்டளை வழங்குவதனை ஆட்சேபித்து மேற்கண்ட கடிதத்தை அஞ்சல் தொலைதொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக் கழகம், யாழ் அரசாங்க அதிபர், ஒய்வூதியத் திணைக்கள அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது

ஒய்வூதியக்காரர்களுக்கு இவ்வாறு காசுக்கட்டளைகள் வழங்குவதற்குப் பதிலாகத் தனித்தனிக் காசோலைகள் வழங்கலாம் என்றும், அக்காசோலைகளை அவர்கள் தாம் பொருள் கொள்வனவு செய்பவர்கள் மூலம் கொடுத்து இலகுவாக மாற்றிக்கொள்ள வசதியாக இருக்குமென்றும் கழகம் தெரிவித்துள்ளது. (ரா)

## கணவரிடமிருந்து தகவல் வராமையால் மனைவி தற்கொலை

மாவிட்டபுரம், செவ்.

வெளிநாடு செல்வதாகக் கூறிச்சென்ற கணவரிடம் இருந்து தகவல் எதுவும் வராமையல் மனமுடைந்த மனைவி நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் ரஞ்சிதமலர் [வயது 24] என்பவரே இவ்வாறு தற்கொலை செயது கொண்டவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா விசாரணை நடத்தியசமயம் சாட்சியங்களிலிருந்து தெரியவந்ததாவது:

''காலஞ்சென்றவர் சுமார் ஒருவருடத்திற்கு முன்னரேயே காதலித்து திருமணம் செய்து கொண்டார். மணமுடித்த பின்னர் இருவரும் தனியாகவே வாழ்ந்து வந்தனர்.

கடந்த மூன்று மாதங்களாக வெளிநாடு செல்லப் போவதாகக்கூறிச் சென்ற இப்பெண்ணின் கணவர் தமதுமனைவிக்கு கடிதம் எதுவும போடவில்லையாம். அத்துடன் கணவரின் பெற்றோர்தான் அவரைக் காசு கட்டி வெளிநாடு அனுப்பியதாகவும் அவருக்குத் தெரிய வந்தது

இவற்றைக் கேள்விப்பட்ட இப்பெண் தமது கணவர் இனி தம்முடன் வந்து வாழ்வாரா என்ற சந்தேகத்தில் மனமுடைந்து நஞ்சருந்தி உயிரை போக்கிக் கொண்டார்.

விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது

சண்டிலிப்பாய் கிராமசேவையாளர் திரு சி. கந்தசாமி சாட்சிகளை ஆஜர் செய்தார். (ஊ)

## மரண அறிவித்தல்

### தாதபிள்ளை வன்னியசிங்கம்

தாதபிள்ளை வன்னியசிங்கம் ஐயாத்துரை) [காணி அபிவிருத்தி இலாகாவில் இளைப்பாறியவர்] காலமாகிவிட்டார் இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் தவபாலசிங்கம் (பபா) நல்லூர் ரான்ஸ்போட் உரிமையாளரும், சிவானந்தசிங்கம் (சவூதி அரேபியா) கிருஸ்ணகுலசிங்கம் (கிருஸ்ணா ரான்ஸ்போட், கோண்டாவில்) உரிமையாளரும் தேவராணி, சுவர்ணராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவராசா (சவூதி அரேபியா), தர்மராஜா ஒட்டுசுட்டான்ஒட்டுக் கூட்டுத்தாபனம் ஞானேஸ்வரி,பரமேஸ்வரி, பதமினி, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 15/1 முருகேசர் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து 9-10-86 (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: V. தவபாலசிங்கம் [பபா]

(C 5086)

### திருமதி வ. நாகம்மா

கரம்பனூர் திருமதி வ. நாகம்மா வேலணையிற் காலமானார். இவர் காலஞ்சென்ற வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம், திருமதி பூமணி, திருமதி ஏகாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயாரும், யாழ் இந்து மகளிர் ஆசிரியை புனிதவதி காலஞ்சென்ற ஆறுமுகம், ஒய்வுபெற்ற அதிபர் சிவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கரம்பனூர் காலஞ்சென்ற கனகம்மா, விசாலாட்சி, மூன்னாள் கிராம சபைத்தலைவர் கதிரித்தம்பி, செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரியும், டாக்டர் ஆ. யசோதரா, (யாழ். அரசினர் வைத்தியசாலை), டாக்டர் சசிதரா [U K], சபேசன் (யாழ். மருத்துவ பீடம்), கரம்பன் திருமதி தனபாக்கியம், வரலட்சுமி, மகேந்திரன், குலேந்திரநாதன், விஜயநாதன், விமலநாதன், வாசுகி, தேவகி, ஜெயநாதன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவர், இவரது ஈமக்கிரியைகள் வேலணை சிவரத்தின ஆசிரியர் இல்லத்தில் இன்று 8-10-86 புதன் மாலை மூன்று மணிக்கு நடைபெற்று சாட்டிமயானத்தில் தகனஞ்செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரர்கள்.

(C 5085)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயந்தி டேவிட்

திருமதி ஜெயந்தி டேவிட் காலமாகிவிட்டார். இவர் டாக்டர் V R. டேவிட் அவர்களின் அருமை மனைவியும், உடுவில் லவ்லேனைச் சேர்ந்த திரு.—திருமதி ஸ்ரீபன்ஸ் அவர்களின் அன்பு மகளும், ஜெயக்குமார், எரிக், விமலாந்தி சத்தியன், பீலிக்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஏழாலையைச் சேர்ந்த திரு — திருமதி வயிரவநாதன் அவர்களின் அன்பு மருமகளுமாவார்.

லவ்லேன் உடுவிலிலுள்ள பெற்றோரின் இல்லத்தில் இறுதி ஆராதனைகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு இன்று புதன்கிழமை (8-10-86) பிற்பகல் 3-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுகொள்ளவும். (C 5087)

### திரு. செல்லையா இராஜேந்திரம்

திரு. செல்லையா இராஜேந்திரம் (இளைப்பாறிய தபால் அதிபர்) காலமாகிவிட்டார். இவர் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் இராசநாதன், ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் எம். அருளானந்தம் (சுங்க இலாகா), சரோஜினிதேவி ஆகியோரின் மாமனாரும், ராஜசுரேஷ், ராஜபாலன், ராஜசேகர், ராஜலட்சுமணன், நிரோசன், ஆனந்தி, அருந்ததி, அஜந்தி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 130, கச்சேரி நல்லூர் றோட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று புதன்கிழமை (8-10-86) 4 மணிக்கு துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C-5088]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126